# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**
*****
**முறையீட்டு மனு எண்.124/2017/பே.2**
**ஆணை நாள். 07–12–2018**

திரு.எம். வானுமாமலை,
த/பெ திரு முத்தையா,
4–சி, ஏழகரம் தெரு,
வடக்குவள்ளியூர் அஞ்சல்,
திருநெல்வேலி மாவட்டம். –– முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
வடக்கு வள்ளியூர் பேரூராட்சி,
திருநெல்வேலி மாவட்டம். –– எதிர் மனுதாரர்

**ஆணை.**

திருநெல்வேலி மாவட்டம், வடக்கு வள்ளியூர், 4–C, ஏழகரம் தெருவினைச் சேர்ந்த திரு.M. வானுமாமலை, என்பவரது 08.06.2017ம் நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 08.06.2017 அன்று பெறப்பட்டு. மேற்படி முறையீட்டு மனுவிற்கு முறையீட்டு மனு எண். 124/2017 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனுவின் மீது அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் இறுதி ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் திரு.M. வானுமாமலை, தான் வடக்கு வள்ளியூர் பேரூராட்சியில் 2010–11ம் ஆண்டு முதல் டெண்டர் பணிகளை செய்து வருவதாகவும், மேற்படி டெண்டர் பணிகளுக்கு தன்னால் செலுத்தப்பட்ட டேவணித் தொகை மற்றும் பணிகள் முடித்துக் கொடுத்தபின்னர் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட கூடுதல் வைப்புத் தொகை ஆகியவை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவ ஆணை எண்.040./2017, நாள்.27.03.2017க்கு பின்னர் வடக்கு வள்ளியூர் பேரூராட்சியால் தனக்கு ரூ.1,97,911/– வழங்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தனக்கு ரூ.2,65,120/– வரை வடக்கு வள்ளியூர் பேரூராட்சி

நிர்வாகம் தரவேண்டியுள்ளது எனவும், தனக்கு கிடைக்கவேண்டிய தொகையினை பெற்றுத் தர நடவடிக்கை எடுக்கக் கோரியும் தனது மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 09.06.2017ம் நாளிட்ட அறிவிப்பாணை மூலம் மேற்கண்ட முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்க தெரிவித்து வடக்கு வள்ளியூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

வடக்கு வள்ளியூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 15.06.2017ம் நாளிட்ட அறிக்கையில், மேற்படி முறையீட்டு மனுதாரருக்கு, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ ஆணைக்கிணங்க வடக்கு வள்ளியூர் பேரூராட்சியில் மனுதாரரது பெயரில் நிலுவையில் இருந்து வந்த வைப்புத் தொகை ரூ.1,97,911/– முழுவதும் 12.04.2018ல் வழங்கப்பட்டு விட்டதாகவும், முறையீட்டு மனுதாரர் பெயரில் வடக்கு வள்ளியூர் பேரூராட்சியில் எவ்வித தொகையும் நிலுவையில் இல்லை எனவும் தனதுஅறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 07.08.2017ம் நாளிட்ட அழைப்பாணையின்படி முறையீட்டு மனுதாரர் மற்றும் வடக்கு வள்ளியூர் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர் மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக தங்களது விளக்கத்தினை பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவத்தில் 27.09.2017ல் ஆஜராகத் தெரிவித்து ஆணையிடப்பட்டது.

27.09.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான முறையீட்டு மனுதாரர் திரு.எம்.வானுமாமலை, தனது விளக்கத்தில் திருநெல்வேலி மாவட்டம், வடக்கு வள்ளியூர் பேரூராட்சி செயல் அலுவலரின் 15.06.2017 நாளிட்ட அறிக்கையினை பெற்றுக் கொண்டதுடன் அதில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் தொடர்பாக அனைத்து ஆவணங்களையும் பரிசீலித்து தனது பதிலினை சமர்ப்பிப்பதாகவும், மேலும் மறு விசாரணைக்கு அழைக்கப்படும் பட்சத்தில் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராவதாகவும் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் 21.10.2017ம் நாளிட்ட கடிதத்தில் வடக்கு வள்ளியூர் பேரூராட்சி செயல் அலுவலரின் கடித ந.க.எண். 124/2017 சம்பந்தமாக 17.10.2017 அன்று வடக்கு வள்ளியூர் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களை சந்தித்து தன்னுடைய மனுவில் உள்ள விவரத்தினை பேரூராட்சி ஆவணங்கள் மூலம் சரிபார்க்க கோரியதாகவும், அதற்கு முறைமன்ற நடுவத்தில் இருந்து உத்திரவு வழங்கினால் மட்டுமே இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என செயல் அலுவலர் தெரிவித்ததாக தெரிவித்து தனது மனுவினை இம்முறைமன்ற நடுவததில் 23.10.2017ல் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 01.03.2018 நாளிட்ட அறிவிப்பாணையில் முறையீட்டு மனுதாரின் 21.10.2017 நாளிட்ட மனுவில் தெரிவித்துள்ளவாறு, மேற்படி மனுதாரரால் செலுத்தப்பட்ட பிணை வைப்புத் தொகை குறித்த விளக்கங்களை பேரூராட்சி ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரருக்கு வழங்கி அதற்கான அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்க ஆணையிடப்பட்டது.

வடக்கு வள்ளியூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 20.03.2018 நாளிட்ட அறிக்கை மூலம் மேற்படி முறையீட்டு மனுதாரரின் மனுவிற்கான அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 10.04.2018 நாளிட்ட அறிவிப்பாணையில் வடக்கு வள்ளியூர் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையின் நகலினை முறையீட்டு மனுதாரருக்கு

அனுப்பிவைத்து அதன் மீதான ஆட்சேபணை/விளக்கத்தினை 30 நாட்களுக்குள் சமர்ப்பிக்கத் தெரிவித்து ஆணையிடப்பட்டது.

மேற்கண்ட அறிவிப்பாணையின்படி முறையீட்டு மனுதாரரின் விளக்கம்/ஆட்சேபணை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்காததால், மீண்டும் ஒரு வாய்ப்பாக 10.05.2018 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் முறையீட்டு மனுதாரருக்கு நினைவூட்டும் அனுப்பப்பட்டது. ஆனால் வடக்கு வள்ளியூர் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கையின் மீதான ஆட்சேபணை/விளக்க அறிக்கை ஏதும் மனுதாரரிடமிருந்து இம்முறைமன்ற நடுவத்தில் நாளது வரை கிடைக்கப்பெறவில்லை. எனவே அனைத்தும் பரிசீலிக்கையில், முறையீட்டு மனுதாரருக்கு கூறிக்கொள்ள கூடுதல் முகாந்திரம் ஏதுமில்லை எனக் கருதி, பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையினை ஏற்று முறையீட்டு மனுவின் மீதான மேல் நடவடிக்கை ஏதுமில்லை என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018–ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 07 – நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளருக்காக.

பெறுநர்

1.திரு.எம். வானுமாமலை,
த/பெ திரு முத்தைய்யா,
4–சி, ஏழகரம் தெரு,
வடக்குவள்ளியூர் அஞ்சல்,
திருநெல்வேலி மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
வடக்கு வள்ளியூர் பேரூராட்சி,
திருநெல்வேலி மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
திருநெல்வேலி மண்டலம்,
என்.ஜி.ஓ.காலனி, பி.ஜவகர் நகர்,
திருநெல்வேலி.